## பாடம்-15

## நீங்களும் உங்கள் எதிர்காலமும்

நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (II கொரிந்தியர் 5:10)

நமக்கு ஆர்வமளிக்கும் கேள்விகளில் ஒன்று “நமது எதிர்காலம் எப்படிபட்டதாய் இருக்கும்?” என்பதே. இதற்கு திருமுறை மிகத்தெளிவாக பதிலைக்கொண்டுள்ளது. இயேசுவானவர் இவ்வுலகத்தைவிட்டு பரமேறிச் சென்றபோது ஒலிவமலையில் இரண்டு தேவதூதர்கள் தோன்றி “உங்களிடத்திலின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்” (அப்போஸ்தலர் 1:11) இயேசு திரும்பி வரும் நாளையோ, நாழிகையையோ நாம் அறியமாட்டோம். (மத்தேயு 24:36) அல்லது இவைகள் நடக்குங்காலங்களையும், சமயங்களையும் குறித்து நமக்குத் தெரியாது (1 தெசலோனிக்கேயர் 5:1).

## ஆனால் இயேசு மறுபடியும் வருகிறார்!

அவர் எதற்காக மறுபடியும் வருகிறார் என்று நாம் கேட்கக்கூடும். மனிதனுடைய பாவத்திற்காக மரிக்கும்மடி மறுபடியும் அவர் வரப்போவதில்லை. ஏனெனில் அதற்காகவே அவர் முன்பு வந்தார் (I தீமோத்தேயு 1:15) அவர் தமது சபையாகிய இராஜியத்தை ஸ்தாபிக்க வரப்போவதில்லை. ஏனெனில் தமது முதல் வருகையில் முடிவிலே அதை ஸ்தாபித்துவிட்டார். (மத்தேயு 4:17; 10:7; 16:18; மாற்கு 9:1; கொலோசெயர் 1:13,14; அப்போஸ்தர் 2:47). ஆனால் அவரது வருகையின் போது என்ன சம்பவிக்கும் என்பதை திருமறை நமக்குத் தெளிவாகக் கூறுகிறது.

**முதலாவதாக**: அவரது வருகையின் போது “மரித்தோர் யாவரும் எழுந்திருப்பார்கள். . . பிரேதக்குழிகளில் உள்ளவர்கள் யாவரும் அவரது சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்” என்று இயேசு சொன்னார் (யோவான் 5:28). பிரேதக்குழியில் உள்ள யாவரும் ஒரே நேரத்தில் எழுந்திருப்பார்கள். உயிரோடிருக்கிறவர்களும் அவரை காண்பார்கள். நீங்கள் (நாம் யாவரும்) அவரை காண்பீர்கள்.

**இரண்டாவதாக**: இயேசுவானவர் வரும்போது இவ்வுலகம் அழிக்கப்படும் (எபிரெயர் 1:10,11; II பேதுரு 2:10-12). நீதிமான்கள் தேவனோடிருக்கவும், அநீதிமான்கள் (முடிவில்லாத) உபத்திரவத்திற்குள்ளாவார்கள் என்றும் திருமறை போதிக்கிறது (மத்தேயு 25:46). இயேசுவின் வருகைக்குபின் இப்பூமி இருக்கப்போவதில்லை. எந்த உயிரினமும், மனிதனும் இதில் இருப்பதில்லை. அப்படியானால் நீங்கள் அப்பொழுது எங்கே இருப்பீர்கள்?

**மூன்றாவதாக**: இயேசு வருகின்றபோது இறுதி நியாயத்தீர்ப்பு நடைபெறும் என்று திருமுறை கூறுகின்றது. இதற்காகவே அவர் மறுபடியும் வருகிறார். இயேசுவைக் கொண்டு தேவன் இப்பூலோகத்தை நியாயந்தீர்ப்பார். (அப்போஸ்தர் 17:31) உலகில் பிறந்து மரித்தும், உயிரோடும் இருக்கிற அனைவரும் தன்தன் கிரியைக்குத்தக்கதாக பலன் அடைவார்கள் (II கொரிந்தியர் 5:10). நீங்கள் கிறிஸ்துவின் நியாயஸ்தலத்தில் நிற்பீர்கள், உங்கள் நிலைமையை உணர்ந்து உங்கள் நடக்கையை அவருக்கு ஒப்புவிக்க விரும்புவீர்களா?

இறுதியாக இயேசுவின் வருகைக்குப்பின் அவருடைய நியாயத்தீர்ப்பின் திட்ட அளவு, எதன்படி இருக்கும்